தீயணைப்பு-மீட்புப் பணித்துறை, தென்சென்னை மாவட்ட அலுவலரின் செயல்முறை
ஆணைகள் பிறப்பிப்பவர் - திரு. சி.ராபின் காஸ்ட்ரோ, பி.இ.,
மாவட்ட அலுவலர், தென்சென்னை மாவட்டம், அசோக்நகர், சென்னை-600 083.

ந.க.எண்: 10365 /ஆ/2023-1 நாள்: 19.10.2023

பொருள்: பணிநியமனம் - தமிழ்நாடு தீயணைப்பு மீட்புபணிகள்துறை - தென்சென்னை மாவட்டம் - தீத்தடுப்புக்குழு - இளநிலை உதவியாளர் காலி பணியிடம் - தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வணைய குழும தேர்வுகள் - தொகுதி IV குறித்த பணிகளுக்கான தேர்வுகளில் செல்வன்.ரா.சுப்பிரமணியன் (பதிவு எண்: 0802005255) தேர்ச்சி பெற்றது - இளநிலை உதவியாளராக தற்காலிகமாக நியமனம் செய்தல் - ஆணைகள் பிறப்பித்தல் - தொடர்பாக

பார்வை: 1. செயலாளர், தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வணைய குழும தேர்வுகள் என்பாரின் கடித எண்: 1943/ PSD-D2/2023, நாள்: 28.08.2023

2. தமிழ்நாடு தீயணைப்பு மீட்புபணிகள் துறை இயக்கக குறிப்பாணை ந.க.எண்: 15782/ ஆ1/ 2022, நாள்: 11.10.2023

-------------

ஆணைகள்:

தமிழ்நாடு அரசு துறைகளில் காலியாகவுள்ள தொகுதி -IV -க்கான பணியிடங்களில் தகுதியான நபர்களை நியமனம் செய்யும் வகையில், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வணைய குழுமத்தினரால் ,கடந்த 24.07.2022 அன்று முற்பகல் நடத்தப்பட்ட தேர்வு முடிவுகளின்படி தெரிவு செய்யப்பட்டுள்ள நபர்களில், தமிழ்நாடு தீயணைப்பு மீட்புபணிகள் துறைக்கு பார்வை 1-ல் காண் கடிதத்தின்படி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளவர்களில் ஒருவரான செல்வன்.ரா.சுப்பிரமணியன் (பதிவு எண்: 0802005255) என்பவராகிய உங்களை, பார்வை (2)-ல் காண் குறிப்பாணைக்கிணங்க, தமிழ்நாடு தீயணைப்பு மீட்புபணிகள் துறை, தென்சென்னை மாவட்ட தீத்தடுப்புக்குழுவில் தற்போது காலியாகவுள்ள இளநிலை உதவியாளர் பதவி பணியிடத்தில் கீழ்காண் நிபந்தனைகளின் அடிப்படையில், தற்காலிகமாக பணி நியமனம் செய்து ஆணைகள் பிறப்பிக்கப்படுகிறது.

நிபந்தனைகள்:

1) தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணைய குழுமத்தினரால் வெளியிடப்பட்டுள்ள பட்டியலில், உங்களது பெயருக்கெதிரே குறிப்பிடப்பட்டுள்ள எண், உங்களது பதவிக்கான முதுநிலையை குறிப்பதல்ல எனவும், உங்களது பணி முதுநிலை நிர்ணயம் குறித்து, தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வணைய குழுமத்தினத்தினரிடமிருந்து உரிய ஆணைகள் பெறப்பட்ட பின்னர், உங்களது பதவிக்கான முதுநிலை நிர்ணயம் செய்யப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

2) இவ்வாணை கிடைக்கப்பெற்றதும், நீங்கள் உங்களுக்கான பணியில் சேரவேண்டும் எனவும், Section 7(5) of the Tamilnadu Government Servant's (Condition of Service) Act 2016 தமிழ்நாடு அரசு மாநில மற்றும் சார்நிலைப்பணி பொது விதி எண்4(e)-ல் குறிப்பிடப்பட்டுள்ள காலகெடு கடந்த பின்னரும், நீங்கள் உங்களுக்கான பணியில் சேராமலிருந்தால், உங்களது பெயரை, உரிய தெரிவுப்பட்டியலில் இருந்து நீக்கம் செய்ய, தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணைய குழுமத்திற்கு பரிந்துரை செய்யப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

-த.பி.பா-

3) தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணைய குழுமத்திற்கு ஏற்கனவே உங்களால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விவரங்களின் அடிப்படையில், இந்த தற்காலிக பணி நியமன ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது என்பதால், உங்களது விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விவரங்களில் ஏதேனும் பொய்யானவை என பின்னர் கண்டறிப்பட்டாலோ அல்லது உங்களது நியமனம் குறித்து, தமிழக அரசால் ஏதேனும் ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டாலோ, உங்களுக்கான இத்தற்காலிக பணி நியமன ஆணை, எவ்விதமான முன்னறிவிப்புமின்றி உடனடியாக ரத்து செய்யப்பட்டு, உங்கள் பணியிலிருந்து நீங்கள் விடுவிக்கப்படுவீர்கள் என தெரிவிக்கப்படுகிறது.

4) நீங்கள் பணிக்கு அறிக்கை செய்யும்போது, உங்களது கல்வி தகுதி குறித்த அசல் சான்றிதழ்களையும் மற்றும் உங்களது சாதி குறித்த அசல் சான்றினையும், இப்பணி நியமன அலுவலரிடம் சமர்ப்பிக்க வேண்டும். கல்வி தகுதி/சாதி குறித்த அசல் சான்றிதழ்களின் உண்மைத்தன்மையில் முரண்பாடு ஏதேனும் பின்னர் கண்டறியப்பட்டால், உங்களுக்கான இத்தற்காலிக பணி நியமன ஆணை, எவ்விதமான முன்னிறவிப்புமின்றி, உடனடியாக ரத்து செய்யப்பட்டு, உங்கள் பணியிலிருந்து நீங்கள் விடுவிக்கப்படுவீர்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

5) நீங்கள் பணிக்கு அறிக்கை செய்யும் சமயம், உங்களது உடல் தகுதி குறித்து, தமிழக அரசால் அங்கீகரிக்கப்பட்ட தகுதி வாய்ந்த உதவி மருத்துவ அலுவலரிடமிருந்தோ (Assistant Surgeon) அல்லது அதற்கு மேற்பட்ட மருத்துவ அலுவலரிடமிருந்தோ வரையறுக்கப்பட்ட படிவத்தில் வடிவமைக்கப்பட்ட மருத்துவ தகுதிசான்றினை, இப்பணி நியமன அலுவலரிடம் நீங்கள் சமர்ப்பிக்க வேண்டும். மேலும், நீங்கள் மாற்று திறனாளியெனில் (Physical handicapped), மாவட்ட மருத்துவக் குழுவிடமிருந்து, உங்களது உடல் குறைபாடு குறித்து பெற்ற மருத்துவ தகுதி சான்றினை, பணிக்கு அறிக்கை செய்யும்போது இப்பணி நியமன அலுவலரிடம் நீங்கள் சமர்பிக்க வேண்டுமெனவும், உரிய மருத்துவ தகுதி சான்றுகளை நீங்கள் சமர்ப்பிக்காவிட்டால், உங்களுக்கென ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள இளநிலை உதவியாளர் பணியில் சேர நீங்கள் அனுமதிக்கப்படமாட்டீர்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

6) நீங்கள் பணிக்கு அறிக்கை செய்த நாளிலிருந்து, மூன்று வருட தொடர் பணி காலத்திற்குள், இரண்டாண்டு காலம் முடிவடையும் நாளில் உங்களது தகுதி காண் பருவ காலத்தினை, திருப்திகரமாக முடிக்க வேண்டுமெனவும், தகுதிகாண் பருவ காலத்தில் உங்களது பணி திருப்திகரமாக இல்லையெனில், உங்கள் பணியிலிருந்து நீங்கள் உடனடியாக விடுவிக்கப்படுவீர்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது. மேலும், நிலுவையில் உள்ள கீழ்குறிப்பிடப்பட்டுள்ள தீர்ப்பின்படி உங்களது இளநிலை உதவியாளர் பணி வரன்முறை செய்யப்படுமெனவும் தெரிவிக்கப்படுகிறது.

**"The Regularization is subject to the outcome of the WPs pending on the files of the Hon'ble High Court of Madras/ Madurai Bench of the Hon'ble High Court of Madras relating to Combined Civil Serivce Examination - IV (Group- IV)"**

7) இளநிலை உதவியாளராக தற்காலிகமாக பணி நியமனம் செய்யப்பட்டுள்ள உங்களுக்கு, தமிழக அரசினரால், இளநிலை உதவியாளர் பதவிக்கென நிர்ணயம் செய்யப்பட்டுள்ள ஊதிய விகிதமான ரூ.19500-62000/- என்ற ஊதிய ஏற்ற முறையில், ஊதியம் மற்றும் தகுதியான பிறப்படிகள் மாதந்தோறும் பெற்று வழங்கப்படுமென தெரிவிக்கப்படுகிறது.

9) கடந்த 01.04.2003 முதல் தமிழ்நாடு அரசு துறை பணிகளில் நியமனம்

-த.பி.பா-

செய்யப்பட்டு வரும் நபர்கள், அரசாணை (நிலை) எண்: 259, நிதி (ஓய்வூதியம்) துறை நாள்: 06.08.2003-ன்படி, பங்கீட்டு ஓய்வூதிய திட்டத்தில் சேர்க்கப்பட்டு வருவதால், நீங்களும் மேற்படி பங்கீட்டு ஓய்வூதிய திட்டத்தில் சேர்க்கப்படுவீர்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

மாவட்ட அலுவலர் 19/10/13
தீயணைப்பு மற்றும் மீட்புப்பணித்துறை
தென்சென்னை மாவட்டம்
19/10/13

பெறுநர்: செல்வன்.ரா.சுப்பிரமணியன்
தந்தை பெயர்: திரு.சு.ராமகிருஷ்ண ஷர்மா,
எண்:9/49, சார் பதிவாளர் அலுவலக சாலை,
கொட்டாரம்,
கன்னியாகுமரி மாவட்டம்,
அஞ்சல் குறியீடு எண்:629 703

நகல்: இயக்குநர்,
தமிழ்நாடு தீயணைப்பு மீட்புபணித்துறை,
எழும்பூர்,
சென்னை - 600 008.

" இணை இயக்குநர்,
வடமண்டலம்,
தமிழ்நாடு தீயணைப்பு மீட்புபணித்துறை,
எழும்பூர்,
சென்னை - 600 008.

" பட்டியல்கள் - (2),

" சம்பளக்கணக்கு அலுவலர் (தெற்கு) சென்னை.